## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

## அசல் வழக்கு எண். 42/2020

இன்று 2026 ம் ஆண்டு ஜூலை 21 நாள் செவ்வாய் கிழமை இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : கண்ணன்

தந்தை பெயர் :

வயது :

தொழில் :

---

**முதல் விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பி.வா.சா.ஆ.2 | 03.12.2001 வேலப்பன் வகையறா (வாதிகள்) பிரதிவாதிகள் 3 முதல் 6 நபர்களுக்கு பொது அதிகார முகவர்கள் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கிரைய பத்திர எண்.1987/2001 | அசல் |
| 2. | பி.வா.சா.ஆ3 | 01.03.2004 பட்டா பாஸ் புத்தகம் 5ம் பிரதிவாதி விஜய்சேகர் பெயரில் உள்ளது | அசல் |
| 3. | பி.வா.சா.ஆ.4 | 18.05.2011 பாலசுப்பிரமணியன் வகையறாவுக்கு எம்.விஜய் சேகர் வகையரா எழுதிகொடுத்த பொது அதிகார பத்திர எண்.617/2011 | அசல் |

| | | | |
|---|---|---|---|
| 4. | பி.வா.சா.ஆ5 | 22.05.2018 பொது அதிகார பத்திரத்தின் ரத்து பத்திரம் பத்திர எண்.20/2018 | அசல் |
| 5. | பி.வா.சா.ஆ6 | 12.04.2018 எஸ்.பி.மணி பிரதிவாதிகளின் வகையறாவுக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| 6. | பி.வா.சா.ஆ7 | 23.07.2018 அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை | சான்றிட்ட நகல் |
| 7. | பி.வா.சா.ஆ.8 | 04.01.2019அ.வ.எண்.295/ 2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை | சான்றிட்ட நகல் |
| 8. | பி.வா.சா.ஆ.9 | 28.01.2019 அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை | சான்றிட்ட நகல் |
| 9. | பி.வா.சா.ஆ.10 | அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.5 | சான்றிட்ட நகல் |
| 10. | பி.வா.சா.ஆ.11 | அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.6 | சான்றிட்ட நகல் |
| 11. | பி.வா.சா.ஆ.12 | அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.7 | சான்றிட்ட நகல் |
| 12 | பி.வா.சா.ஆ.13 | அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.8 | சான்றிட்ட நகல் |
| 13 | பி.வா.சா.ஆ.14 | அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.9 | சான்றிட்ட நகல் |
| 14 | பி.வா.சா.ஆ.15 | அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.10 | சான்றிட்ட நகல் |
| 15 | பி.வா.சா.ஆ.16 | அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.11 | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| 16 | பி.வா.சா.ஆ17 | 25.04.2019அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சமரச குறிப்பு | சான்றிட்ட நகல் |
| 17 | பி.வா.சா.ஆ.18 | 25.04.2019 அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கின் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| 18 | பி.வா.சா.ஆ.19 | 25.04.2019 அ.வ.எண்.295/2018, ADJ திருப்பூர் வழக்கின் தீர்ப்பு | சான்றிட்ட நகல் |
| 19 | பி.வா.சா.ஆ.20 | 19.08.2019 எம்.விஜயசேகர் (5ம் பிரதிவாதி) வகையரா இடையில் ஏற்படுத்தப்பட்ட பாகசாசன பத்திரம் பத்திர எண்.4181/2019 | சான்றிட்ட நகல் |
| 20 | பி.வா.சா.ஆ.21 | 19.08.2019 தென்னரசு (9ம்பிரதிவாதி) எம்.விஜயசேகர் (5ம் பிரதிவாதி) வகையறா எழுதிகொடுத்த கிரைய பத்திரம் ஆவண எண்.4189/2019 | சான்றிட்ட நகல் |
| 21 | பி.வா.சா.ஆ22 | எஸ்.யோகலட்சுமி என்பவருக்கு எம்.விஜய்சேகர் வகையறா எழுதிகொடுத்த கிரையபத்திரம் ஆவண எண்.4190/2019 | சான்றிட்ட நகல் |
| 22 | பி.வா.சா.ஆ.23 | 19.08.2019 கண்ணன் என்பவருக்கு எம்.விஜய்சேகர் வகையறா எழுதிகொடுத்த கிரைய பத்திரம், ஆவண எண்.4187/2019 | சான்றிட்ட நகல் |
| 23 | பி.வா.சா.ஆ.24 | 19.08.2019 பாலசுப்பிரமணியன் என்பவருக்கு எம்.விஜய்சேகர் வகையறா எழுதிகொடுத்த கிரையப்பத்திரம், ஆவண எண்.4188/2019 | சான்றிட்ட நகல் |
| 24 | பி.வா.சா.ஆ.25 | 13.09.2019 ஸ்ரீதேவி என்பவருக்கு ருக்மணி எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம். ஆவண எண்.4695/2019 | சான்றிட்ட நகல் |
| 25 | பி.வா.சா.ஆ.26 | 13.09.2019 கலைவாணி விஜயகுமார் என்பவருக்கு ருக்மணி எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம். ஆவண எண்.4694/2019 | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| 26 | பி.வா.சா.ஆ.27 | 10.02.2020 செல்வி வகையறாவுக்கு ருக்மணி எழுதிகொடுத்த கிரைய பத்திரம்.. ஆவண எண்.688/2020 | சான்றிட்ட நகல் |
| 27 | பி.வா.சா.ஆ.28 | 13.02.2020 செல்வி வகையறாவுக்கு இடையே ஏற்பட்ட பாகசாசன பத்திரம். ஆவண எண்.779/2020 | சான்றிட்ட நகல் |
| 28 | பி.வா.சா.ஆ.29 | 04.03.2020 செல்வி வகையறாவுக்கு இடையே பிழை திருத்தல் பத்தரம் மூலம் ஏற்பட்ட பாகசாசன பத்திரம். ஆவண எண்.1216/2020 | சான்றிட்ட நகல் |
| 29 | பி.வா.சா.ஆ.30 | 07.03.2022 டாட்டா கேப்பிட்டல் ஹவசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு லட்சுமி என்பவர் எழுதிகொடுத்த அடமான கடன் பத்திரம்.ஆவண எண்.1194/2022 | சான்றிட்ட நகல் |
| 30 | பி.வா.சா.ஆ.31 | 07.03.2022 ம் தேதியிட்ட அடமான கடன் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| 31 | பி.வா.சா.ஆ.32 | கணிணி பட்டா (15 எண்ணிக்கை) | கணிணி நகல் |

( வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.18 மற்றும் வா.சா.ஆ.26 முதல் வா.சா.ஆ.31 ஆவணங்கள் வேறு வழக்குக்கு தொடர்புடைய ஆவணங்கள் என்பதாலும் அது அவ்வழக்கில் குறியீடு செய்யப்படாத ஆவணங்கள் என்பதாலும் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்கு வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை செய்தார். அவரது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டு மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. )

**முதல் விசாரணை முடிக்கப்பட்டது**.

**குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்மந்தமான அனைத்து நடவடிக்கைகளும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பி.வா,சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் அ.வ.எண்.295/2018 வழக்கில் எஸ்.பி மணி தாக்கல் செய்த

ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு விபரங்களை யாரிடம் எப்போது கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் எனது வீடு பக்கத்தில் உள்ளதால் எனக்கு நேரடியாகவே முதலில் இருந்தே தெரியும். எஸ்.பி. மணி அ.வ.எண்.295/2018 வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் நான் சொத்தை வாங்க சென்ற போது தெரியும்.

2. 2019ம் ஆண்டில் நான் சொத்தை கிரையம் பெற்ற போது தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கு சமாதானமாக முடிந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். நான் அ.வ.எண்.295/2018 வழக்கு விபரங்களை எதிர்வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 என்னிடம் காட்டப்படும் ஆவணம் மூலம் வாதியின் தந்தை வேலப்பன் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அது வேலப்பனுக்கு தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் அவர் பெயரில் கிரையம் இருந்தால் அவருக்கு தான் பாத்தியம்.

3. வா.சா.ஆ.2 பாகசாசனபத்திரத்தின்படி வேலப்பனுக்கு ஏ அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு வேலப்பன் அவரது வாரிசுகள் சேர்ந்து 1,2 பிரதிவாதிகளுக்கு ஒரு பொது அதிகாரப்பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணமான வா.சா.ஆ.3ல் மேற்படி சொத்துக்கள் வேலப்பனுக்கு தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. ( வழக்குரை பத்தி 4ல் வேலப்பனுக்கு சுயராஜிதவகையிலும், பிதுராஜிதவகையிலும் சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு விட்டு அதற்கு எதிராக தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்டது என்று வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேள்வி கேட்பதாக 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். அவரது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டு பதில் பதிவு செய்யப்படுகிறது.)

4. வேலப்பனுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டிருந்து அதன் பிறகு அவரது வாரிசுகளுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டதாக தான் வா.சா.ஆ.3ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் அவரது வாரிசுகளும் சேர்ந்து கையொப்பம் இட்டுள்ளார்கள். பொதுவாக ஒருவருக்கு தனிப்பட்ட வகையிலும் சுயராஜதவகையிலும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தால் அவர் இறந்த பிறகு தான் அவரது வாரிசுகளுக்கு சென்றடையும் என்றால் தெரியாது. ( மேற்கண்ட கேள்வி வழக்குரையில் இல்லை என்பதால் 7 முதல் 12 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை செய்தார்.) பிரமாண வாக்குமூலத்தில் 16.01.2001 ல் வேலப்பன் அவரது வாரிசுகளை விட்டு விட்டு இறந்து விட்டதாக சொல்வது தவறு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது. வேலப்பன் எப்போது இறந்தார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனது கிரையத்திற்கு முன்பே இறந்து விட்டார், வேலப்பன் இறந்ததற்கான ஆதாரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. வேலப்பனின் வாரிசுகள் தான் வாதிகள் என்றால் சரிதான். வேலப்பன் பவர் கொடுத்த தேதியில் இருந்து 5 ஆண்டுகள் கழித்து 1,2 பிரதிவாதிகள் அவர்களது மனைவிகளான ருக்மணி, நாச்சாத்தாள் மற்றும் 5ம் பிரதிவாதி விஜயசேகர் பெயரில் கிரையம் பத்திரம் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. அந்த கிரைய ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துளளேன். அந்த கிரைய ஆவணம் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து திருப்பூர் மாவட்டத்தில் உள்ள போது என்ன காரணத்தால் கோபிசெட்டிபாளையத்தில் பதிவு செய்யப்பட்டது என்று வா.சா.ஆ.4ல் எழுதப்பட்டதா என்றால் எழுதியுள்ளார்களா என்று ஞாபகம் இல்லை.அப்போது இருந்த சட்டப்படி எங்கு வேண்டுமானாலும் பதிவு செய்யலாம் .

6. எதனால் திருப்பூரில் உள்ள சொத்திற்கு கோபிசெட்டிபாளையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் கிரையம் வாங்கும்போது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளதால் நான் கேட்க வில்லை. வா.சா.ஆ.4ல் முதல் 5 சொத்து திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். அதில் 2வது அயிட்ட சொத்தான கோபி வட்டம், அளுக்குளி கிராமத்தில் ஒரு சிறு பகுதியான 0.10 செண்ட் இடத்தை சேர்த்து கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பொதுவாக மாவட்டம் விட்டு வேறு மாவட்டத்தல் கிரையம் செய்யும் போது சம்மந்தப்பட்ட பதிவு அலுவலகம் உள்ள மாவட்டத்தில் அமைந்துள்ள சொத்தை தான் முதல் அயிட்டமாக காண்பிப்பார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

7. 2வது அயிட்ட சொத்தை எழுதும் போது 1,2 பிரதிவாதிகளுக்கு அளுக்குளி கிராமத்தில் சொத்து இருந்ததற்கான ஏதாவது ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முயற்சி செய்கிறேன். வா.சா.ஆ–4ல் அளுக்குளி கிராமத்தில் உள்ள சொத்திற்கான பட்டாவோ, அல்லது வேறு மூலபத்திரங்களோ குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் தெரியாது.ஆரம்பம் முதலே 1,2 பிரதிவாதிகள் திருப்பூர் மாவட்டத்தில் சொத்தை பதிவு செய்தால் தெரிந்து விடும் என்ற காரணத்தால் கோபிசெட்டிபாளையத்தில் வா.சா.ஆ.4 பதிவு செய்துள்ளார்கள் என்றால் சட்டப்படி தான் பதிவு செய்துள்ளார்கள். வா.சா.ஆ.4 ஏற்பட்ட பிறகு 11 ஆண்டு காலம் தாவா சொத்து எவ்வித ஆவணமும் ஏற்படவில்லை என்றால் 2018ம் ஆண்டு எஸ்.பி.மணி அ.வ.எண்.295/2018 வழக்கு தாக்கல் செய்து அதில் சமரசம் செய்துள்ளார்கள்.

8. வா.சா.ஆ.4 ஆவணத்தில் 2வது அயிட்ட சொத்து அளுக்குளி கிராமத்தில் உள்ள 0.10 செண்ட் சொத்தை பொறுத்து 2019ல் 1 முதல் 5 பிரதிவாதிகள் பாகசுறார் செய்யும் போது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒரு

சொத்தை பாககறார் செய்ய வேண்டும் என்றால் அதில் சம்மந்தப்பட்ட வாரிசுதாரர்களை சேர்த்து அனைத்து சொத்துக்களை தான் பாகக்கறார் செய்ய வேண்டும் என்றும், அந்த மாதிரி சொத்தே இல்லாததால் தான் அதனை பாகக்கறாரில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சொத்து உள்ளது. எனது கூற்றுப்படி வேலப்பன் மற்றும் அவரது வாரிசுகள் வா.சா.ஆ.3 பொது அதிகாரப்பத்திரம் எழுதிகொடுத்த பிறகு அவர்களுக்கு உரிமையில்லை என்கிறேன் என்றால் சரிதான்.

9. 1996ல் வா.சா.ஆ.3 பொது அதிகாரப்பத்திரம் எழுதப்பட்டு, 2001ல் 1,2 பிரதிவாதிகள் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதிகொடுத்து 19 வருடங்கள் கழித்தும் தாவா சொத்தின் பட்டா வாதியின் தந்தை வேலப்பனின் பெயரிலேயே இருந்து வந்தது என்றால் சரியல்ல. 2004ல் விஜயசேகர் பட்டா வாங்கியுள்ளார். எனது 2019 கிரையப்பத்திரத்திலும் மற்ற பிரதிவாதிகளின் கிரைய பத்திரத்திலும் வேலப்பனின பெயர் உள்ளது என்றால் தெரியாது. சொத்தை கிரையம் பெறும்போது நான் பட்டாவை பார்க்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் பட்டாவில் உள்ள விபரம் தெரிந்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அடுத்தடுத்த ஆவணங்கள் ஏற்படுத்தினால் வாதிகள வழக்கு சொத்திற்கு வரமாட்டார்கள் என்று எண்ணி ஒரே நாளில் பாகசாசனம் மற்றும் கிரைய ஆவணம் மற்றும் தானசெட்டில்மெண்ட் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளீர்கள் என்றால் அது சட்டப்படி செல்லும் ஆவணங்கள்.

10. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகளுக்குள்ளும் அவரது உறவினர்களுக்குள்ளும் தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தற்போது எனது மகனுக்கு எலக்ட்ரிக்கல் ஹார்வேர்டு கடை வைத்து கொடுத்து அவருக்கு உதவியாக உள்ளேன். ரியல் எஸ்டேட் செய்கிறேன் என்றால் இல்லை. சொத்தை கிரையம் வாங்கும் போது அளந்து பார்த்து தான் வாங்கியுனேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சொத்தின் காலை எண் தெரியவில்லை. நான் சொத்தை அளந்து பார்த்தபிறகு தான் கிரையம்

பெற்றேன். ஒரு செண்டை எவ்வளவு விலைக்கு வாங்கினேன் என்றால் கம்பியான அளவிற்கு தான் வாங்கினேன். பத்திரத்தில் விலை குறைவாக எழுதப்பட்டுள்ளது உண்மையில் ஒரு செண்டிற்கு ரூபாய் இரண்டு லட்சம் கொடுத்தேன். சொத்தை கிரையம் பெறும் போது வில்லங்கம் பார்த்து சட்ட கருத்துரை பார்த்து கிரையம் பெற்றேன். வில்லங்கம், அளந்து பார்த்த ஆவணங்களை தாக்கல் செய்ய இயலுமா என்றால் வில்லங்கத்தை தாக்கல் செய்ய முயற்சி செய்கிறேன். நான் யாருக்கு பணம் கொடுத்து கிரையம் பெறவில்லை என்றும் ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு மட்டுமே இந்த பதிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் அளந்து பார்த்ததற்கான ஆவணமோ வில்லங்க சான்றோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. நான் பிரமாண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.3 எழுதப்பட்ட போது தகுந்த மறுபயன் கொடுத்து எழுதியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு அந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. பணம் கொடுத்த போது நான் இருந்தேனா என்றால் இல்லை பணம் கொடுத்து வாங்கியதாக சொன்னார்கள். எவ்வளவு பணம் என்று தெரியாது. வாதிகள் பணமே வாங்கவில்லை என்று சொல்லியுள்ளபோது வழக்கிற்கு பின்னிட்டாவது எவ்வளவு பணம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் செட்டில் செய்துவிட்டதாக சொன்னார்கள். உண்மையில் பணம் கொடுத்திருந்தால் ரசீது எழுதி வாங்கியிருப்பார்கள் என்றும், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் 1 முதல் 4 பிரதிவாதிகள் பணம் கொடுத்து செட்டில் செய்ததாக சாட்சியம் அளிக்கிறார்.

12. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்தை விற்பனை செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டு அதற்கான கணக்கை ஒப்படைக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஆனால் கணக்கை ஒப்படைத்து விட்டதாக சொன்னார்கள். எஸ்.பி.மணி தாக்கல் செய்த அ.வ.எண்.295/2018 வழக்கு ஆவணங்களை நேரடியாக யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன்

என்றால் அந்த வழக்கில் எனக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. நான் அவ்வழக்கில் தரப்பினரே இல்லை என்றும் கோர்ட் மூலம் அறிவிப்பு வந்தது என்றும் அ.வ.எண்.295/2018 வழக்கு என்ன வழக்கு என்றால் தெரியாது. அந்த வழக்கின் தரப்பினர்களும் எனக்கு யார் என்று தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.21 17:08:33 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.